தென்றல் தீ யாய் மாறும் காலம்
அண்ணன் தாயானான் எங்கள் நெஞ்சம் யாவும்
தானாய் நின்று  தாவும்திராணன் வேரின் நீரானான்
அண்ணன் சொன்ன வேதம் என்ன
சொல்லு சொல்லு சொல்லு சொல்லு 2

பகை விழும் தந்திரம் துணிவுடன் பயிர்ச்சி
வேகமும் விவேகமும் எப்போதும் வைத்திரு
இன்னும் இன்னும் அதிகமுண்டு

வென்றால் வாழ்வு அன்றேல் சாவு புயலாய் மாறு என்றான்
பெண்ணே நீயும் வீரம் சேரும் நேரம்  என்றே குருவானான்
அண்ணன் எங்கள் விழியானான்
அண்ணன் சொன்ன வேதம் என்ன
சொல்லு சொல்லு சொல்லு சொல்லு 2
மனதிலே உறுதி தேசத்தில் பற்று
முடியும் என்ற நம்பிக்கை எப்போதும் வைத்திரு
இன்னும் இன்னும் அதிகமுண்டு

கூட்டைவிட்டு காட்டை தேடி நாங்கள் வந்தாலும்
அதை வாளும் வீடாய்  அண்ணன் தந்தான்
எங்கள் திசையானான் வீரம் என்னும் திசையானான்
அண்ணன் சொன்ன வேதம் என்ன
சொல்லு சொல்லு சொல்லு சொல்லு 2
பகைவனை எப்போதும் அச்சத்தில் வைத்திரு
முன்பும் அவன் வெல்லுவான் நெஞ்சத்தில் வைத்திரு
இன்னும் இன்னும் அதிகமுண்டு

சின்னச்சின்ன தேவை கூட நொடியினிலே அறிவான்
வீடு செய்தே மேடு பள்ளம் பாயும் ஆறாய் தான் வளர்த்தான்
மண்ணில் தேச தீ வளர்த்தான்
அண்ணன் சொன்ன வேதம் என்ன
சொல்லு சொல்லு சொல்லு சொல்லு 2
முயன்றிடு பாதைகள் எப்போதும் திறக்கும் இல்லையோ அவைகள்
மூடியே கிடக்கும் என்றார் இன்னும் அதிகமுண்டு

தூரம் என்று எதும் இல்லை பாரம் என்ற சொல்லேயில்லை
ஏலாதென்றால் சேரும் தொல்லை பொராடென்றான் போராடென்றான்
தென்றல் தீ யாய் மாறும் காலம்
அண்ணன் தாயானான் எங்கள் நெஞ்சம் யாவும்
தானாய் நின்று  தாவும்திராணன் வேரின் நீரானான்
அண்ணன் சொன்ன வேதம் என்ன சொல்லு சொல்லு சொல்லு சொல்லு 2

பயந்தவர் கையிலே ஆயுதம் பாரம் துணிந்தவர் எவருக்கும் அதுவேபலமாம்
என்றார் இன்னும் அதிகமுண்டு அதிகமுண்டு